## சுருக்கம்

பணியமைப்பு – நகராட்சி நிர்வாக ஆணையரகம், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நகராட்சிகளில் பணிபுரியும் கணினிப் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தவும் மற்றும் இதர பணிப்பயன்கள் வழங்கவும் ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நப.1) துறை

அரசாணை(நிலை) எண்.60 நாள்:11.04.2008.

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.201, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.01.1998.
2. அரசாணை (நிலை) எண்.202, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.01.1998.

மீண்டும் படிக்க:

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.5163/2003/OP.4, நாள் 20.11.2003, 23.11.2006, 04.03.2007 மற்றும் 19.03.2008.

-----

ஆணை:-

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் நகராட்சி நிர்வாக ஆணையரகம், மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள நகராட்சிகளில் கணினி சம்பந்தப்பட்ட பணிகளுக்காக திட்ட ஆராய்வாளர்–1, திட்ட அமைப்பாளர்–7, உதவி திட்ட அமைப்பாளர்–103, பள்ளி விவர குறிப்பாளர்–59 ஆகிய பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்கண்ட பணியாளர்களுக்கான கல்வித் தகுதிகள் மற்றும் பிற தகுதிகள் நிர்ணயித்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், இப்பணியாளர்களுக்காக 'தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் தகவல் தொழில்நுட்ப பணி விதி 2008' உருவாக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு வரைவு விதிகள் குறித்த செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார். இது குறித்து தனியாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையரகம், மண்டல நகராட்சி நிர்வாக இயக்ககம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள கணினி பணியாளர்கள் 1999 –ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பணியாளர்களுக்கு பணிவிதிகள் உருவாக்கப்படாததால், பணி வரன்முறைப் படுத்துதல், ஆண்டு ஊதிய உயர்வு வழங்குதல், தேர்வு நிலை போன்றவைகள் வழங்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. இவர்களுக்கு அனைத்துப் பணிப்பயன்கள் வழங்கும் பொருட்டு அரசின் நிர்வாக ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையை ஏற்று, பணிவிதிகள் வெளியிடுவதை நிலுவையில் வைத்து, மேலே ஒன்று மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணி வரன்முறை, ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்புப் பயன்கள் ஆகியவற்றை அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
(வழி: நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5).
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 600 108.

நகல்:–
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11.4.08
பிரிவு அலுவலர்

11/4/2008